செய்தி வெளியீடு எண். 331 நாள்18.09.2006

செய்தி வெளியீடு

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை ஹூண்டாய் மோட்டார்ஸ் குழுமத்தின் தலைவர் கொரியா நாட்டிலிருந்து வருகைபுரிந்துள்ள அந்நிறுவனத்தின் முதுநிலை அதிகாரிகள் குழுவுடன் இன்று (18.09.2006) தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். அப்பொழுது, தமிழக அரசின் தலைமைச் செயலாளரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்களும் உடனிருந்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசும் ஹூண்டாய் நிறுவனத்திற்கு அளித்து வரும் ஆதரவுகளுக்கு ஹூண்டாய் குழுமத்தின் தலைவர் நன்றி தெரிவிப்பதாகவும், தமிழகத்திலுள்ள தொழிலாளர்களின் திறமை தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளது என்றும் முதலமைச்சர் அவர்களிடம் கூறினார். தமிழகத் தொழிலாளர்களால் தயாரிக்கப்படும் ஹூண்டாய் கார்கள் மிகச் சிறந்த தரம் உடையவை என்றும், அவை, ஐரோப்பிய நாடுகளின் சந்தைகளில் புகழ் பெற்று விளங்கும் வோல்ஸ்வேகன், மெர்சிடீஸ், போன்ற பல கார்களுடன் போட்டியிடத்தக்கவை என்றும் அவர் அப்பொழுது தெரிவித்தார்.

ஹூண்டாய் நிறுவனத் தலைவர், தமிழகத்தில் ஏறத்தாழ 3220 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்யும் புதிய திட்டங்களை ஹூண்டாய் நிறுவனம் கொண்டுள்ளது என்று தெரிவித்ததுடன் இந்தப் புதிய முதலீட்டுத் திட்டங்களுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஹூண்டாய் நிறுவனத்தின் கோரிக்கைகளை அரசு கவனத்தில் கொண்டு புதிய முதலீடுகளுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்புகளை அளிக்கும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9